# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C)

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET

Case No. **SC.No.101/2022**
Prosecution: **PW-7**

**Deposition of the witness of LW** -4

| **Name** | மஸ்தான் | **District** | கடலூர் |
|---|---|---|---|
| **Father's Name** | மாலிக் | **Calling** | சிறப்பு உதவி ஆய்வாளர், அண்ணாமலை நகர் காவல் நிலையம், கடலூர் |
| **Age** | 50 | **Religion** | |
| **Village/Town** | அண்ணாமலை நகர் | **Caste** | |
| **Taluk** | சிதம்பரம் | **Aadhar Card No.** | 3109 0120 1100 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of July 2026.

2ம் எதிரி ஆஜர். 1, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது அண்ணாமலை நகர் காவல் நிலையம், கடலூரில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் அரக்கோணம் மது விலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 22.12.2018ம் தேதி காலை சுமார் 11 மணிக்கு ஆய்வாளர் பரந்தாமன், உதவி ஆய்வாளர் குலோரி மற்றும் நான் மது விலக்கு சம்மந்தமாக கண்காணித்துகொண்டு காவேரிபாக்கம் பேருந்து நிலையம் அருகே

வந்தபோது எங்களை கண்ட உடன் ஓட எத்தனித்தவர்களை மடக்கிபிடித்து விசாரித்தபோது அவர் பெயர் ஆனந்தன் என்றும் தான் திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்தவர் என்று தெரிவித்தார். தான் ஏற்கனவே மணிகண்டன் என்பவரை கைது செய்தபோது தான் உடன் இருந்ததாகவும், அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 30 எரிசாராய கேன்களை கைப்பற்றியது சம்மந்தமாக தானும் உடன் இருந்ததாக கூறிய ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அதில் சாட்சியமாக நானும், என்னுடன் இருந்த குலோரி உதவி ஆய்வாளர் அவர்களும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம்.

2. 2ம் எதிரி ஆனந்தனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அந்த 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1. சம்பவயிடத்தில் இருந்து எங்கள் காவல் நிலையம் 20 கிமீ தொலைவில் உள்ளது. காவேரிபாக்கம் பேருந்து நிறுத்தம் எப்பொழுதும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றும், சுமார் 50 கடைகள் அங்கு இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சென்ற சமயத்தில் மக்கள் நடமாட்டம் அதிகம் இல்லை. மேலும், அந்த சமயத்தில் ஒரு சில கடைகள் தான் இருந்தது 50 கடைகள் இல்லை.

2. சம்பவயிடம் அருகில் ஆட்டோ ஸ்டேன்ட் உள்ளது. அதில் 3 அல்லது 4 ஆட்டோக்கள் இருந்தது. எதிரியுடன், நானும், மற்ற உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் ஆகியோர் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் ஒரு மணி நேரம் இருந்தோம்.

3. அந்த ஒரு மணி நேர இடைவெளியில் பேருந்து நிறுத்தத்தில் இருப்பவர்களையோ அல்லது கடைகளில் இருப்பவர்களையோ எதிரியை கைது செய்து விவரம் குறித்தும், அவரது ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ய வேண்டும் என்றும் பொதுமக்கள் யாரையும் அழைத்தோமா என்றால் நாங்கள் அழைத்தோம். ஆனால் அவர்கள் சாட்சியாக இருக்க முன் வரவில்லை. அவ்வாறு நாங்கள் அழைத்ததாக சொல்லும் பொதுமக்கள் யாருக்கும் போலீஸ் நோட்டீஸ் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

4. எதிரி காவல் நிலையத்தில் கையெழுத்து எதுவும் செய்தாரா என்றால் இல்லை. சம்பவயிடத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தார். ஒப்புதல் வாக்குமூலம் 2 பக்கங்கள் உடையது அது கையால் எழுதப்பட்ட ஆவணம். அதில் 2வது சாட்சி கையொப்பம் நான் செய்தேன். ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் செய்யவில்லை.

5. ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்ற எண் எதுவும் குறிப்பிடபட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது. குற்ற எண்.252/2018 என்பதாகும். அந்த குற்ற எண்னிற்கான வழக்கு நான் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து போடுவதற்கு எத்தனை மாதங்களுக்கு முன் பதிவு செய்யப்பட்ட வழக்கு என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடம் இருந்து வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ஒப்புதல் வாக்குமூலத்தில் மட்டும் தான் சாட்சி கையொப்பம் செய்தேன்.

7. சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் பதிவு செய்த குற்ற வழக்கு சம்மந்தமாக நானும், உதவி ஆய்வாளர் குலோரியும் காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்து அதில் என்னிடமும், எதிரியிடமும் கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. நான், உதவி ஆய்வாளர் குலோரி மற்றும் ஆய்வாளர் அரசுக்கு சொந்தமான டாடா சுமோ வாகனத்தில் தான் சம்பவயிடத்திற்கு வந்தோம். எங்களுடன் வேறு யாரும் வரவில்லை. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், நான் எனது மேல் அதிகாரிக்கு பவ்யப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-A.Daoudh Ammal,
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.